**இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) இ.க.நி. 01 விபரமான வருமானக் கூற்று குறித்த மாதிரி அமைப்பிற்கு அமைவாகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இ.க.நி. 02 இருப்பு மதிப்பீட்டின் போது கிரயம் மற்றும் தேறிய கைக்கெட்டும் பெறுமதி ஆகிய இரண்டில் குறைவான பெறுமதியைப் பயன்படுத்த வேண்டிய போதிலும் மரமுந்திரிகை விற்பனை நிலையங்களிலும் செயன்முறை நிலையங்களிலும் முற்றாகப் பூர்த்திசெய்யப்பட்ட மரமுந்திரிகைப் பருப்புகளின் இருப்புக் கிரயமும் தேறிய கைக்கெட்டும் பெறுமதியும் கருத்திற்கொள்ளப்படாது விற்பனை விலையில் 80% கிரயமாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. இவ்வாறே 90% மற்றும் 75% வரையான பூர்த்திசெய்யப்படாத மரமுந்திரிகைப் பருப்புகளின் இருப்பும் மேற்குறிப்பிடப்பட்ட கிரயத்திற்கு விகிதாசார முறையில் கணிப்பிடப்பட்டு இருப்பு மதிப்பிடப்பட்டிருந்தது.

| | | |
|---|---|---|
| (இ) | இ.அ.அ.கூ நியமம் 01 | நிதி நிலைமைக்கூற்று தயாரிக்கப்படுகையில் காணி மற்றும் வாகனங்கங்கள் தவிர்ந்த ஏனைய நிலையான சொத்துக்கள் மீள மதிப்பிடப்படாது கிரயத்திலிருந்து திரண்ட பெறுமானத்தேய்வு கழிக்கப்பட்ட பெறுமதி காண்பிக்கப்பட்டிருந்தது. நிறுவகத்தின் வெளி அலுவலகங்களும் நிலையான சொத்துக்களும் பாரியளவில் உள்ளமையால் அவற்றை ஒரே தடவையில் மீள்பெறுமதியிடுவது மிகவும் சிரமமானது என தலைவர் அறிவித்துள்ளார். |
| (ஈ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 | (i) மீள்பெறுமதியிடப்பட்ட பெறுமதியில் வெளியிடப்பட்ட காணி மற்றும் வாகனங்கள் தொடர்பாக வெளிப்படுத்தப்பட வேண்டிய விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| | | (ii) நெதகமுவ மற்றும் புத்தளம் செயன்முறை நிலையங்கள் தவிர்ந்த ஏனைய பயிர்ச்செய்கைகளுடனான தோட்டங்களின் சட்டபூர்வ உரிமை கூட்டுத்தாபனத்திற்கு இல்லாத போதிலும் அத் தோட்டங்களில் மீள்பெறுமதியிடப்பட்ட பெறுமதியாக ரூபா 3,083,279,850 தொகை கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும் இத் தோட்டங்கள் 1973 இலிருந்து மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கைக்காக அரசாங்கத்தால் வழங்கப்பட்டவை என தலைவர் அறிவித்துள்ளார். |
| | | (iii) காணி, கட்டிட மற்றும் வாகனங்கள் தவிர்ந்த ஏனைய நடைமுறையற்ற சொத்துக்களில் 57% அளவிலான ரூபா 18,752,624 கிரயமான சொத்துக்கள் முற்றாக பெறுமானத்தேய்விடப்பட்டிருந்த போதிலும் கூட்டுத்தாபனத்தினால் மேலும் பயன்படுத்தப்பட்ட அச் சொத்துக்களை மீளப் பெறுமதியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 18 | ஊழியர் கடன் வட்டி வருமானம் ஆக்கபூர்வமான வட்டி வீகிதத்தின் பிரகாரம் இனங்காணப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 19 | (i) | பணிக்கொடைக்காக ஒதுக்கம் மதிப்பீட்டாளரால் மதிப்பிடப்பட்டு நட்டம் இனங்காணப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | | (ii) | பணிக்கொடை நிதியத்தை முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (எ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 41 | | மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்திடம் உள்ள உயிரியல் ரீதியான சொத்துக்கள் இந் நியமனத்தின் பிரகாரம் கணக்கிடப்பட்டு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

### 1.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

இலங்கை கணக்கீட்டு நியமம் 01 இன் பிரகாரம் ஒரு தொழில் முயற்சியால் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுகையிலும் சமர்ப்பிக்கப்படுகையிலும் பயன்படுத்தப்படும் சகல முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் பின்வரும் கொள்கைகள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(அ) வருமானங்களை இனங்காணல்கள்

(ஆ) ஆதன, பொறி மற்றும் உபகரணங்களின் அளவீடு

### 1.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மூலதன மானியத்திலிருந்து மேற்கொள்ளப்பட்ட செலவினத்தில் ரூபா 426,876 தொகையான நிலையான சொத்துக்களின் பெறுமானத்தேய்வு உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2011 ஆம் ஆண்டின் போது இனவிருத்திப் பிரிவு, விதைப் பூங்கா மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவிற்கு 255,369 மரமுந்திரிகை நாற்றுக்கள் ரூபா 20,231,507 கிரயத்திற்கு

மாற்றப்பட்டிருந்த போதிலும் மரமுந்திரிகைப் நாற்றுக்களின் உள்ளபடியான கிரயம் ரூபா 9,756,271 ஆகக் காணப்பட்டமையால் ரூபா 10,475,236 ஆல் 2011 ஆம் ஆண்டிற்கான இலாபம் கூடுதலாக வெளிக்காட்டப்பட்டிருந்தமை மீளாய்வாண்டின் போது சீராக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதியில் 2010 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்து முன்கொண்டுவரப்பட்ட வெளி கடன்பட்டோர் மீதி ரூபா 2,003,354 ஆகக் காணப்பட்டது. அக் கடனை மீள அறவிடும் செயல் முன்னேற்றம் நலவிவான மட்டத்தில் காணப்பட்டது.

### 1.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள் பின்வருமாறாகும்.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் தொடர்பான விபரம் |
|---|---|
| (அ) 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதி அதிகாரச்சட்டம் மற்றும் 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதிய அதிகாரச்சட்டம் | ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் பங்களிப்புத் தொகை செலுத்தப்படுகையில் வாழ்க்கைச் செலவுப் படி மற்றும் விசேட வாழ்க்கைச் செலவுப்படியுடனான சம்பளத்தின் அடிப்படையில் பங்களிப்புத் தொகை கணிப்பிடப்பட வேண்டிய போதிலும் இதற்கு முரணாக அடிப்படைச் சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு பங்களிப்புத் தொகை கணிப்பிடப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டின் போது ரூபா 3,248,394 தொகையான பங்களிப்புத் தொகை குறைவாகச் செலுத்தப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ஆ) | 2003 யூன் மாதம் 02 ஆம் திகதிய பீஈடீ/12/8.3.5(அ) ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | தலைவரின் உத்தியோகபூர்வ வாகனத்திற்கு மேலதிகமாக ரூபா 40,000 தொகைப் படி மாதாந்த வாடகையைச் செலுத்தி வாடகை வாகனமொன்றும் அவரது பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் ரூபா 44,233,831 தொகையான மிகையினை விளைவித்திருந்ததுடன் இதனொடொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 20,448,951 ஆகக் காணப்பட்டது. இதன் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது ரூபா 23,784,880 தொகையான மிகை அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. திவிநெகும செயற்திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டிற்கான விற்பனை வருமானம் ரூபா 35,608,145 ஆல் அதிகரித்தமை இவ்வதிகரிப்பிற்குக் காரணமாகியது. மீளாய்வாண்டின் போது அரசாங்க மானியமாக ரூபா 73,076,037 தொகை பெறப்பட்டிருந்ததுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டின் போது ரூபா 81,255,721 தொகை பெறப்பட்டிருந்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2012 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவுற்ற ஆண்டின் போது நிறுவகத்தின் நிதிவிளைவு 2011 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவுற்ற ஆண்டின் போது நிலவிய நிலைமையுடன் ஒப்பிடப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

**(அ) வணிகப் பிரிவு**

| | தோட்ட மற்றும் விற்பனைப் பிரிவு | | | வணிக நாற்றுமேடைப் பிரிவு | | |
|---|---|---|---|---|---|---|
| | 2012 | 2011 | வருமான அதிகரிப்பு, (குறைவு) மற்றும் செலவின அதிகரிப்பு, (குறைவு) சதவீதமாக | 2012 | 2011 | வருமான அதிகரிப்பு, (குறைவு) மற்றும் செலவின அதிகரிப்பு, (குறைவு) சதவீதமாக |
| | ரூபா | ரூபா | % | ரூபா | ரூபா | % |
| மொத்த வருமானம் | 57,375,124 | 57,582,062 | (0.3) | 101,947,112 | 66,106,905 | 54 |
| மொத்தச் செலவினம் | 61,367,823 | 59,372,280 | 3 | 36,115,643 | 25,122,425 | 44 |
| செயற்பாட்டு இலாபம்/ (நட்டம்) | (3,992,699) | (1,790,218) | 123 | 65,831,469 | 40,984,480 | 61 |

**(ஆ) சேவைப் பிரிவு**

| | 2012 | 2011 | வருமான அதிகரிப்பு, (குறைவு) மற்றும் செலவின அதிகரிப்பு, (குறைவு) சதவீதமாக |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | % |
| அரசாங்க மானியம் - மூலதனம் | 16,890,069 | 33,630,222 | (50) |
| - மீண்டுவருபவை | 58,580,000 | 50,000,000 | 17 |
| வணிகப் பிரிவு இலாபம் | 61,838,770 | 39,194,262 | 58 |
| ஏனைய வருமானம் | 1,362,562 | 2,210,122 | (38) |
| மொத்த வருமானம் | 138,671,401 | 125,093,806 | 11 |
| சேவைப் பிரிவின் மொத்தச் செலவினம் | 94,437,570 | 104,585,656 | (10) |
| ஒட்டுமொத்த தேறிய இலாபம் | 44,233,831 | 20,448,950 | 116 |

(அ) தோட்ட மற்றும் விற்பனைப் பிரிவின் செயற்பாட்டு நட்டம் 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 123% ஆல் அதிகரித்திருந்தது.

(ஆ) திவிநெகும நிகழ்ச்சித்திட்டத்திற்காக மரமுந்திரிகைப் பயிர்களின் விற்பனையின் மூலம் கூட்டுத்தாபனத்தின் விற்பனை வருமானம் 2011 ஆம் ஆண்டின் போதும் 2012 ஆம் ஆண்டின் போதும் முறையே 59% ஆலும் 276% ஆலும் அதிகரித்திருந்தது.

### 2.2.3 நிதிக் கட்டமைப்பு

சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிறுவகத்தின் நிதிக் கட்டமைப்பு 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலவிய நிலையுடன் ஒப்பிடப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

| வளங்கள் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | மாற்றமடைதல் சதவீதம் |
|---|---|---|---|
| | 2012 | 2011 | |
| | ரூபா | ரூபா | |
| அரசாங்க மானியம் - மூலதனம் | 34,959,185 | 258,821,820 | (86) |
| ஏனைய நிறுவக மானியம் | 17,910,572 | 13,570,026 | 32 |
| மூலதன ஒதுக்கம் | 3,100,200,606 | 4,464,178,935 | (30) |
| நீண்டகாலப் பொறுப்பு | 37,784,779 | 27,834,961 | 36 |
| மு/இலாப நட்டம் | 117,787,907 | (88,802,915) | 233 |
| | 3,308,643,049 | 4,675,602,827 | |
| **பயன்பாடு** | | | |
| நிலையான சொத்துக்கள் | 3,141,510,372 | 4,509,793,519 | (30) |
| பயிர்ச்செய்கைக் காணிகளுக்கான செலவினங்கள் | 51,601,489 | 107,039,021 | (52) |
| ஏனைய சிறு செயற்திட்டங்கள் | 707,535 | 739,277 | (4) |
| தேறிய நடைமுறைச் சொத்துக்கள் | 114,823,653 | 58,031,010 | 98 |
| | 3,308,643,049 | 4,675,602,827 | |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் தோட்டத்திலுள்ள மரமுந்திரிகை விளைச்சல் மற்றும் மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கை பகுதிகள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறாகும்.

| தோட்டம் | உற்பத்தி | உற்பத்திக் கிரயம் | கி.கி. ஒன்றின் கிரயம் | முதிர்ச்சியடைந்த மரமுந்திரிகை பகுதி | முதிர்ச்சியடையாத மரமுந்திரிகைப் பகுதி | வயது நிலை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | முதிர்ச்சியடைந்தவை | முதிர்ச்சியடையாதவை |
| | கி.கி | ரூபா | ரூபா | ஹெக். | ஹெக். | வரு. | வரு. |
| புத்தளம் | 10,260 | 9,493,325 | 925 | 264.71 | 20.24 | 30 இற்கு மேல் | 5 இற்கு குறைவானவை |
| கமந்தளுவை | 39,440 | 8,642,719 | 219 | 146 | 20 | 30 இற்கு மேல் | 5 இற்கு குறைவானவை |
| எலுவன்குளம் | 48,570 | 6,282,007 | 129 | 77 | 04 | 11 இற்கு மேல் | 5 இற்கு குறைவானவை |
| ஹார்தி | 5,850 | 999,884 | 171 | 70.85 | 10.12 | 30 இற்கு மேல் | 5 இற்கு குறைவானவை |
| நாலந்தா | 4,870 | 764,788 | 157 | 20.24 | 8.1 | 10 இற்கு மேல் | 5 இற்கு குறைவானவை |
| விலச்சிய | 1,600 | 183,347 | 114 | 7.28 | - | 10 இற்கு மேல் | - |
| மஹஓய | - | - | - | - | 10.12 | - | 5 இற்கு குறைவானவை |
| மொத்தம் | 110,590 | 26,366,070 | 238 | 586.08 | 72.58 | | |

(i) கூட்டுத்தாபனத்தின் விளைச்சல் தரும் 586 ஹெக்டேயரில் 82% அளவான 481 ஹெக்டேயர்கள் 30 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பயன்தரும் ஆயுட் காலத்தைக் கடந்திருந்தது.

(ii) மரமுந்திரிகை கி.கி. 1 இற்கான சந்தைப் பெறுமதி ரூபா 270 அளவான போதிலும் புத்தளத்திலுள்ள தோட்டத்தில் மரமுந்திரிகை கி.கி. 1 இற்கான உற்பத்திக் கிரயம் ரூபா 925 அளவில் காணப்பட்டது.

### 3.2 முகாமைத்துவத் திறமையீனங்கள்

அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறாகும்.

(அ) 2012 ஆம் ஆண்டின் போது மிரிச்சிவில தோட்டத்தில் மரமுந்திரிகை விளைச்சல் ரூபா 64,822 பெறுமதியான 288 கி.கி. ஆகும். ஆண்டின் நிர்வாகச் செலவினமும் நேரடிச் செலவினமும் ரூபா 2,141,154 ஆனமையால் 2012 ஆம் ஆண்டிற்கான செயற்பாட்டு நட்டம் ரூபா 2,076,332 ஆகக் காணப்பட்டது.

(ஆ) புத்தளம் தோட்டத்தின் 2012 ஆம் ஆண்டிற்கான வருமானம் ரூபா 2,962,981 ஆன போதிலும் நேரடியான மற்றும் நிர்வாகச் செலவினம் ரூபா 9,551,318 ஆனமையால் 2012 ஆம் ஆண்டிற்கான செயற்பாட்டு நட்டம் ரூபா 6,588,067 ஆகக் காணப்பட்டது.

### 3.3 இனங்காணப்பட்ட நட்டம்

மீளாய்வாண்டின் போது கொன்டச்சி, மன்கேனி மற்றும் லக்கல தோட்டங்களின் பௌதீக ரீதியாகக் காணப்படாத கட்டிடம், உபகரணம், முதிர்ச்சியடைந்த பிரதேசத்தின் செலவினம், முதிர்ச்சியடையாத பிரதேச செலவுகள் என்பவற்றை அகற்றப்பட்டதன் மூலமும் மிரிச்சவில தோட்டம், மிரிச்சவில சுற்றுலா விடுதி மற்றும் மிரிச்சவில விற்பனை நிலையத்தை அரசுடமையாக்கப்பட்டதன் காரணமாக அங்கே காணப்பட்ட காணி, கட்டிடங்கள், முதிர்ச்சியடைந்த பிரதேச செலவினம், முதிர்ச்சியடையாத பிரதேசச் செலவினம் என்பன அகற்றப்பட்டதன் மூலமும் ரூபா 72,754,773 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது. இந்நட்டத்தில் மிரிச்சவில சுற்றுலா விடுதி அரசுடமையாக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் போது சுற்றுலா விடுதி திருத்தவேலைகளுக்காக ஏற்பட்ட ரூபா 2,710,143 தொகையான செலவினமும் உள்ளடக்கப்பட்டிருந்தது. கூட்டுத்தாபனத்தினால் கட்டுப்படுத்த முடியாத விடயங்களினால் இந் நட்டத்தை ஏற்பதற்கு நேர்ந்ததாக தலைவர் அறிவித்திருந்தார்.

### 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது நிறுவகத் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) மீளப் பெறப்படும் மரமுந்திரிகைகளைப் பொறுப்பேற்றல்

(ஆ) மரமுந்திரிகை இருப்பைக் களஞ்சியப்படுத்தல்

(இ) வாகனக் கட்டுப்பாடு